கவலையா! கண்ணீரா!!

# இயேசு ஆறுதலளிக்கிறார்

## Jesus Consoles Ministries

T. அருள்தாஸ்

செம்ப்டம்பர் 2026



# ஆறுதல் மடல்...

நாம் நம் இதயங்களில் கொண்டிருக்கும் நம்பிக்கை, விசுவாசம் என்பது ஏதோ ஒரு ஊழியத்திற்காகவோ, ஒரு ஸ்தாபனத்திற்காகவோ, ஒரு நிறுவனத்திற்காகவோ, அல்லது ஒரு சபைக்காகவோ, சங்கத்திற்காகவோ அல்ல. நம்மில் முற்றிலும் அன்பு கூர்ந்து தம்முடைய ஜீவனையே நமக்காகத் தந்த இயேசுவுக்காகவும், அவரது சித்தத்திற்காகவுமே என்பது மேலான சத்தியம். இந்த உறுதியுடன் நீங்கள் காணப்படுவீர்களானால் ஒருபோதும் நீங்கள் அசைக்கப்படுவதில்லை. இந்த நம்பிக்கைத் தான் நம்மை இன்றும் தேவனுக்காக செயல்பட தூண்டுகிறது.

கடந்தமாதம் இன்னும் ஒரு மிஷ்னரியை வடமாநிலம் அனுப்ப தேவன் இரக்கம் செய்தார். மேலும் நடைபெற்ற CSI மாலைக்கோடு மற்றும் CSI அம்சி தெரு நற்செய்திக் கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாய் அமைந்தது. ஜெபித்த உங்களுக்கு மிக்க நன்றி. இந்தமாத ஊழியங்களையும் உங்கள் ஜெபத்தால் தாங்க வேண்டிக்கொள்கிறேன். இந்த மாதம் 20, 21, 22 ஆகிய நாட்களில் குஜராத் மற்றும் மத்திய பிரதேச மாநில ஊழியங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்க வேண்டிக் கொள்கிறேன். மத்திய பிரதேச மாநிலம் அலிராஜ்பூர் மாவட்டம் சர்தி கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆலயம் அற்பணம் செய்யப்படவுள்ளது. தயவாய் ஊக்கமாக ஜெபியுங்கள்.

ஆறுதலின் கூடாரத்தில் நடைபெறும் அனைத்து கூட்டங்களிலும் தேவன் தமது கிரியைகளினால் வரும் ஒவ்வொருவரையும் மகிழ்ச்சியடையச் செய்கிறார். அனைத்து செவ்வாய்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் கூடுகைகள் இந்த மாதமும் நடைபெறும். தொடர்ந்து ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். இந்த பத்திரிகை உங்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கிறது என்று நம்புகிறேன். நீங்கள் பெறும் அனுபவங்களை எங்களுக்கும் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஜெபத் தேவைகளை எங்களோடு பகிர்ந்து கொள்ளலாம். நிச்சயமாய் இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்வார்.

அடுத்த மாத பத்திரிகையில் நாம் சந்திக்கும் வரை சர்வ வல்ல தேவனுடைய கிருபையையும் இரக்கமும் உங்களுக்குப் போதுமானதாக இருக்கட்டும்.

இம்மாத வாக்குத்தத்த செய்தியை jesusconsolesmarthandam
என்ற Youtube -ல் கேளுங்கள்



**"சுகமாய் தங்கியிருக்கப்பண்ணுவேன்"**
(எரேமியா. 32 : 27)

அன்புடனும் ஜெபத்துடனும்
அன்பரின் ஆறுதல்பணியில்
உங்கள் சகோதரர்
**T. அருள்தாஸ்**

இயேசு சீக்கிரம் வருகிறார்

**உங்கள் ஜெப உதவிக்கு :**
Mob : **9489492152** **9442302152**
: Jcaruldhas YouTube : Jesus Consoles Marthandam
Visit:www.jesusconsolesministries.org



# வல்லமையுள்ள தேவன்

சிறப்பு செய்தி

கடந்த மாதம் வரை நம்மை கண்ணின் மணிபோல் பாதுகாத்த தேவன் இந்த புதிய மாதத்தை உங்களுக்கு சந்தோஷமான ஆசீர்வாதமான மாதமாக அமைய உதவி செய்வார்.

இந்த மாதத்திலும் ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்வதின் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன். நம்முடைய தேவன் வல்லமையுள்ளவர். அப்போஸ்தலனாகிய பரி. பவுல் எழுதும்போது கூறுகிறார்.

அவர் உங்களிடமாய்ப் பலவீனரல்ல, உங்களிடத்தில் வல்லவராயிருக்கிறார். II கொரிந்தியர் 13:3.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு வல்லமையாய் செயலாற்றுகிறவர். வல்லமையுடையவர் மகிமையானவை களை எனக்குச் செய்தார் என்று மரியாள் கூறினாள். (லூக்கா 1:50) அப்படிப்பட்ட தேவன் உங்களிடத்தில் பலவீனராக அல்ல, வல்லவராயிருக்கிறார் அவர் தம்முடைய வல்லமையை பலவிதங்களில் மக்களி டையே வெளிப்படுத்துகிறார். சத்தியத்தின் அடிப்படையில் எவைகளிலெல்லாம் தேவன் வல்லவராயிருக்கிறார் என்று மூன்று குறிப்புகளை மாத்திரம் உங்க ளோடு பகிர்ந்து கொள்ள ஆசிக்கிறேன்.

## 1. இரட்சிப்பதில் வல்லவராயிருக்கிறார்

அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபிரேயர் 7:25) உலகத்திலே இரட்சகராக அவதரித்த இயேசு உங்களை இரட்சிக்க வல்லவர். நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படுதல் அவசியம். ஆத்ம மீட்பு மிகவும் அருமை யாயிருக்கிறது. (சங்கீதம் 49:9) சங்கீதம் 3:8 கூறுகிறது. இரட்சிப்பு கர்த்தருடையது. அவர் தம்முடைய இரட்சிப்பை சிலுவை யிலே சிந்தின இரத்தத்தின் மூலமாக நமக்கு இலவசமாய் தருகிறார். இரட்சிப்பை பெறுவது நம்முடைய பெலத்தினாலோ அல்லது சாமர்த்தியத்தினாலோ அல்ல. வல்லமையுடைய தேவன் ஈவாக நமக்கு கொடுக்கும் பரிசு. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர் கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8) எந்த ஒரு ஆத்துமாவும் கெட்டுப்போக வேண்டும் என்பது ஆண்டவருடைய சித்தம் அல்ல. எல்லா மனுஷரும் இரட்சிக்கப் பட வேண்டும் என்பதே அவருடைய சித்தம். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1 தீமோத் தேயு 2:4) இந்த விலையேறப்பெற்ற இரட்சிப்பை பெற்றுக்கொள்ள வேண்டு மென்றால் ஒரே வழி வல்லமையுள்ள தேவனாகிய இயேசுவே. அவரே நம்மை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயிருக் கிறார். நம்முடைய ஆத்தும இரட்சிப்பு ஒரே நாளில் முடிவதும் அல்ல. ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட கூடியது. முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப் படுவான். (மாற்கு 13:13) இரட்சிப்பின் அனுபவம் என்பது நம்முடைய கடைசி மூச்சு வரை காணப்பட வேண்டியது.

அது நம்மால் முடியாது ஆனால் வல்லமை யுள்ள தேவனால் முடியும். அவர் தாம் கடைசி வரை நம்மை நிலை நிறுத்த வல்லவராயிருக்கிறார். தேவன் அவனை நிலை நிறுத்த வல்லவராயிருக்கிறார் (ரோமர் 14:4) வழுவாதபடி நம்மை பாதுகாத்து, தேவனுடைய சந்நிதானத்தி லே மாசற்றவர்களாய் நிலை நிறுத்தவும் அவர் வல்லவராயிருக்கிறார். இந்த வல்லமையுள்ள தேவன் உங்களையும் இரட்சிப்பார். அவர் அருளும் இரட்சிப்பை உங்களுடைய வாழ்க்கையில் ருசித்திருக் கிறீர்களா?

அன்பானவர்களே! ஒரு மனிதனு டைய வாழக்கை மாறுவது என்பது மனித னால் ஏற்படக்கூடியதே அல்ல. அது ஜீவனுள்ள தேவனால் காணப்படும் காரியம். அவரே நம்மை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். நீங்களும் இந்த இலவசமான இரட்சிப்பை பெற்றுக்கொள்ளும் படியாக இரட்சிப்பின் சந்தோஷத்துக்குள் பிரவேசிக்கும்படியாக வல்லமையுள்ள தேவன் உங்களை அழைக்கிறார்.

## 2. வாக்கை நிறைவேற்றுவதில் வல்லவராயிருக்கிறார்

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப் படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4:21) வாக்குத்தத்தம் கொடுத்த கர்த்தர் அந்த வார்த்தையை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் உலகத்தில் வாழும் மனிதன் வாக்கு கொடுக்கலாம் அல்லது மற்றவர்கள் தன்னுடைய வார்த்தையை நம்பும்படியாக கூறலாம். ஆனால் செயலில் செய்ய முடியாமல் போய்விடுவார்கள். ஆனால் நம்மை படைத்த தேவன் ஒரு நாளும் தாம் சொன்ன வார்த்தையி லிருந்து மாறினதில்லை. தாம் சொன்ன வார்த்தையிலிருந்து மாறுவதற்கு அவர் மனிதன் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரோ? (எண்ணா கமம் 23:19). அவர் தாம் சொன்ன சகல வார்த்தைகளையும் நிறைவேற்ற வல்லவ ராயிருக்கிறார். ஆபிரகாம் தனக்கு மிகுந்த வயதான போதிலும் தன் சரீரம் செத்துப் போனதையும் சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணாமல் வாக்குத்தத்தம் பண்ணின தேவனை நம்பி விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4:12-21) ஆகவே தேவன் தாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்ற வல்லமையுடையவராயிருந்தார். ஆபிரகாமுக்கு நூறு வயதில் பிறந்த குமாரனாகிய ஈசாக்கை தேவனுடைய கட்டளையின்படி பலி செலுத்துவதற்காக மோரியா தேசத்திற்கு போகும் போது ஆபிரகாம் வேலைக்காரரைப் பார்த்து சொன்னது என்னவென்றால் நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய் தொழுது கொண்டு உங்களிடத் துக்குத் திரும்பி வருவோம் என்றான். (ஆதி. 22:5) ஆபிரகாம் சொன்ன இந்த வார்த்தையானது மிகுந்த நம்பிக்கையை ஊட்டுவதாக இருந்தது. அவன் கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்தான்.

பிரியமானவர்களே தேவன் நமக்குக் கொடுத்த வேதப்புத்தகத்தில் அடங்கியுள்ள அனைத்து வார்த்தைகளும் வாக்குத் தத்தங்களே. அந்த வாக்குத்தத்தங்கள் ஆம் என்றும் ஆமென் என்றும் உள்ளது (II கொரி. 1:21) அந்த வார்த்தை ஒருநாளும் ஒழிந்து போவதில்லை (மத்தேயு 5:18) ஆகவே நாம் அதை நம்பி விசுவாசிக்கும் போது நம்முடைய தேவன் அந்த வாக்கையெல்லாம் நிறைவேற்றுவார். ஜீவனுள்ள தேவனின் வல்லமையுள்ள வாக்கை நம்பி ஜீவிக்கிறோமா?

## 3. தப்புவிப்பதில் வல்லவராயிருக்கிறார்

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்கவல்லவராயிருக் கிறார் (தானியேல் 3:17) நாம் ஆராதிக்கிற

தேவன் நம்மை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவரும் ஜீவனுள்ள தேவனுக்கு விரோதமான பொற்சிலையை பணிந்து கொள்ளாததினால் அவர்கள் அக்கினி சூளையின் நடுவே தூக்கி வீசப்பட்டார்கள். அவர்களை கொண்டு சென்றவர்கள் செத்தார்களே தவிர, இவர்கள் மூவருக்கும் சேதம் ஏதும் இல்லை. சர்வவல்லமையுள்ள தேவன் இவர்களோடு கூட காணப்பட்டு அவர்களை தப்புவிக்க வல்லவராயிருந்தார். தானியேல் தினமும் 3 வேளை ஜெபம் செய்கிறார் என்ற காரணத்திற்காக சிங்க கெபியில் போடப்பட்டான். ஆனால் சிங்கங்களின் வாயை தேவன் கட்டினபடியால் அவைகள் அவனை ஒன்றும் செய்யவில்லை வல்லமையுள்ள தேவன் தானியேலை தப்புவித்தார். சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார் (தானி. 6:22). தாவீது இளைஞனாயிருந்த போது ஆட்டு மந்தையை மேய்த்துக் கொண்டிருந்த போது, ஒரு விசை சிங்கமும் ஒரு விசை கரடியும் வந்தது. அந்த துஷ்ட மிருகங்களிடம் இருந்து தேவன் என்னை தப்புவித்து அவைகளை கொன்று போடவும் தேவன் உதவி செய்தார். (1 சாமு. 17:36) அப்படியிருக்க இந்த பெலிஸ்தனாகிய கோலியாத் எம்மாத்திரம். அவன் கையிலிருந்தும் தேவன் என்னை தப்புவிப்பார் என்று சொன்னது போலவே தப்புவித்தார். பின்னும் தாவீது; என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்த பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றார் (1 சாமு. 17:37) தாவீதை சிங்கத்திற்கும் கரடிக்கும் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவித்த தேவன் நம்மோடிருக்கிறார். சாத்ராக் மேஷாக், ஆபேத்நேகோவை அக்கினி சூளையிலிருந்தும், தானியேலை சிங்க கெபியிலிருந்தும் தப்புவித்த தேவன் வல்லவராயிருக்கிறார். அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார். (சங்கீதம் 91:3) நம்முடைய வாழ்க்கையில் அன்றாடம் நாம் சந்திக்கிற பிரச்சனைகள், கஷ்டங்கள், போராட்டங்கள், நோய்கள் யாவையிலும் இருந்து நம்மை தப்புவிக்க வல்லவர். நம்முடைய திராணிக்கு மேலாக அவர் ஒருநாளும் நம்மை சோதிக்கமாட்டார். மேலும் நமக்கு வரும் சோதனை களை உபத்திரவங்களை தாங்கிக் கொள்வதற்கான பெலனையும் தப்பித்துக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடும் கூட அதற்கு தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். (1 கொரி. 10:13)

இவ்விதமான ஆபத்தான சூழ்நிலைகளில் வல்லமையுள்ள தேவன் நமக்கு எப்பொழுதும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். அவர்நாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே. அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபிரேயர் 2:18)

அன்பானவர்களே, நம்முடைய தேவன் வல்லமையுள்ளவர், வல்லமையான காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் செய்பவர், உங்களுக்கு ஆத்ம இரட்சிப்பை கொடுக்கவும், தாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்றவும் உங்களுக்கு எதிர்வரும் சகல ஆபத்துகளிலிருந்தும் தப்புவிக்கவும் அவர் வல்லவராயிருக்கிறார். இந்த வல்லமையுள்ள தேவனை உங்கள் இதயத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? இல்லையேல் இன்றே அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் உங்கள் இருதயத்தில் வந்து உங்கள் வாழ்க்கையில் சகல காரியங்களிலும் தம்முடைய மகத்துவமான வல்லமையை வெளிப்படுத்துவார்.

# உங்கள் அற்புதத்தின் நாள் கூடுகை மற்றும் மிஷ்னரி அற்பணக் கூடுகை...

தேவனுடைய மேலான கிருபையால் 2026 ஆகஸ்ட் 1 முதலாவது சனிக்கிழமை காலை 10 முதல் 2 மணி வரை ஆனிபானு அரங்கத்தில் நடைபெற்ற கூடுகை மிகவும் ஆசீர்வாதமாய் அமைந்தது. திரளான ஜனங்களை தேவன் அழைத்து வந்திருந்தார். நமது ஊழியத்தின் சார்பில் 32-வது மிஷ்னரி அற்பணத் தொழுகையும் ஆசீர்வாதமாய் தேவன் நடத்த கிருபையைக் கொடுத்தார். அருமையான மிஷ்னரி. கிருஷ்ணா சோரன் (Krishna Soran) அவர்கள் அற்பணிக்கப்பட்டார்கள். இவர் ஜார்கண்ட் மாநிலம் கஞ்சன்பூர் கிராமம், பொக்காரா மாவட்டத்தைச் சார்ந்தவர். YMM பொதுச்செயலாளர் மற்றும் குழுவினர் கூடுகையில் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள். தரிசனம் நிறைந்த பாடல்கள், ஆராதனை மிகவும் ஆவிக்குரிய நிலையில் அமைந்தன. சகோ. R. அருள்ஜோதி அவர்களின் செய்தி அனைவரையும் சிந்திக்கத் தூண்டியது. இறுதியில் சகோ. T. அருள்தாஸ் அவர்கள் வந்த ஒவ்வொருவருக்காகவும் சிறப்பு ஜெபத்தை ஏறெடுத்தார்கள். இந்த மிஷனரியை தாங்க முன் வந்த சகோதரி. Tephy (D/o. Viji Chandrakumar) அனைவருக்கும் மதிய உணவை பகிர்ந்தார்கள் இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.

அடுத்த கூடுகை செப்டம்பர் 5 மற்றும் அக்டோபர் 3

## ஆகஸ்ட் 1-ல் நடைபெற்ற கூடுகை














சாரோன்
டெக்ஸ்டைல்ஸ்

சாரோன்
டெக்ஸ்டைல்ஸ்

சாரோன்
டெக்ஸ்டைல்ஸ்

சாரோன்
டெக்ஸ்டைல்ஸ்

சாரோன்
டெக்ஸ்டைல்ஸ்






# எழுப்புதல் மிஷனறி இயக்கம்
## (REVIVAL MISSIONARY MOVEMENT (RMM)
(A Unit of Jesus Consoles)

இதோ, நான் சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூட வருகிறதென்று தமது வருகையில் அவரது ஜனங்களுக்கு தேவன் அருளும் பலன்களைக் குறித்து வாக்குரைப்பதை வெளிப்படுத்தல் 22:12-ல் நாம் பார்க்கிறோம்.

உங்களை ஏற்றுக் கொள்கிறவன் என்னையே ஏற்றுக் கொள்கிறான் என்றும், தீர்க்கத்தரிசியை ஏற்றுக் கொள்கிறான் அதற்கேற்ற பலனையும், நீதிமானை ஏற்றுக்கொள்கிறவன் நீதிமானுக்கேற்ற பலனையும், சீஷன் என்னும் நாமத்தி னிமித்தம் ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பவனும் அதற்கேற்ற பலனை அடையாமற் போவதில்லை என்று தமது இரண்டாம் வருகையில் மனிதர்களாகிய நமக்கு இயேசு கிறிஸ்து அருளும் பலன்களை விரிவாக கூறுவதை பார்க்கிறோம் மத். 10:40-42.

அன்பு உடன் பங்காளரே, நீங்கள் கிறிஸ்துவுக்காய்ப் படும் பிரயாசங்கள் ஒருபோதும் வீணாய்ப் போவதில்லை. இயேசு என்ற நாமத்தில் நீங்கள் அவரது இராஜ்ய விருத்திக்காக எதைச் செய்தாலும் எண்ணப்படாமல் போவதில்லை. பிரியமானவர்களே, ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள் அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன் என்று கூறி காணாமற்போன ஆடுகளை தேடி தொழுவம் சேர்த்திட தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட சீஷர்களை உலகெங்கும் அனுப்பிய ஆண்டவரின் அறைகூவலை இன்று தங்கள் இதயக் கதவுகளில் தொனிக்கக் கேட்டு புறப்பட்டு களம் கண்டிருக்கும் ஜவான்களுக்குப் பின் துணை நல்கிடும் உங்கள் முழங்கால் யுத்தமும், ஆதரவுகளும் தேவனுடையப் பார்வையில் முக்கியமானதே. ஓநாய்களைப் போல பீறிடத் துடிக்கும் பயங்கரங்கள் மூலம் வரும் சவால்களை சந்திக்கத் துணிவுடன் தங்கள் அழகான பாதங்களை பதித்து காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும், குக்கிராமங்களிலும் அலைந்து திரிந்து சிலுவையில் அறையப்பட்ட, கிறிஸ்துவை பிரசங்கிக்கும் சுவிசேஷ போர் வீரர்களுடன் இணைந்து ஆத்தும அறுவடை பணியில் செயல்பட வேண்டிய நல்ல தருணம் இதுவே.

பிரியமானவர்களே! உங்கள் பாதங்களை அம்மண்ணில் பதியசெய்ய இயலாவிட்டாலும் நீங்கள் முழங்காலில் ஏறெடுக்கும் கருத்துச் செறிந்த தன்னலமற்ற ஜெபங்களும், அற்பணமுள்ள ஈகைகளும் பாதம்பதித்திருப்போரின் முழங்கால்களை வலுப்படுத்தும், அறுவடைப் பணி தீவிரமடையும், சவால்கள் சாத்தியமாகும், கொக்கரிக்கும் கூட்டங்களின் சதிகள் சிதறடிக்கப்படும். உலகின் முடிவுக்கும் இயேசுவின் வருகைக்கும் பரலோக நாள்காட்டியில் குறிக்கப்பட்டிருக்கும் நாள் வெகுவிரைவில் தோன்றும். இயேசு கிறிஸ்து இராஜாதி இராஜாவாய் வருவது விரைவில் சாத்தியமாகும். உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.

நண்பரே! நாம் வாழும் மணல்மேடான வாழ்க்கை, புயல் வந்தால் சரிந்திடும், சம்பாத்தியங்கள் மண்மேடாகும் கிறிஸ்துவுக்காய் மேற்கொண்ட சேவையே நிலைநிற்கும். அவர் அருளும் பலனுக்கோ அழிவில்லை. அற்பணத்தோடு முன் வருவோம். நம் பாரதத்தை தற்பரன் வீடாக்குவோம்.

இயேசுவுக்காய் செலவு பண்ணவும்! செலவு பண்ணப்படவும்!!

| | |
|---|---|
| மிஷனறி ஆதரவு காணிக்கை | : ரூ 3000 (மாதம்) |
| ஆதிவாசி குழந்தை ஆதரவு | : ரூ 2000 (மாதம்) |
| வட இந்தியாவில் ஒரு ஆலயம் கட்ட | : ரூ 5 முதல் 7 லட்சம் |

## காணிக்கை அனுப்ப வேண்டிய வழிமுறைகள்

### வங்கி மூலம்

| | |
|---|---|
| Account Name | : Jesus Consoles |
| Bank | : Canara Bank |
| Branch | : Marthandam |
| A/c No. | : 1108101030771 |
| IFSC | : CNRB0001108 |

| | |
|---|---|
| Account Name | : T. Aruldhas |
| Bank | : Axis Bank |
| Branch | : Marthandam |
| A/c No. | : 917010055399014 |
| IFSC | : UTIB0002771 |

### மணியாடர் (E.M.O.)

Bro. T. Aruldhas
Jesus Consoles, Opp. Bus Stand,
Marthandam - 629 165
K.K. Dist. Tamil Nadu

G Pay
9442302152

### காசோலை (Cheque) வரையோலை (Demand Draft)

**Jesus Consoles or T. Aruldhas**

காணிக்கை விபரத்தை 9442302152 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு அல்லது Whatsapp மூலமாக தயவாய் தெரியப்படுத்துங்கள்.

## சாட்சிகள்



நான் ஒவ்வொரு மாதமும் அற்புதத்தின் நாள் கூடுகையில் பங்கு கொண்டு வருகிறேன். ஒருநாள் பிரயாணமாய் இருந்தபோது திடீரென்று ஒரு வாகனம் எனக்கு நேராக வந்தது. என் வாழ்க்கை முடிந்ததென்று நினைத்தேன். கர்த்தர் அந்த கொடிய ஆபத்திலிருந்து என்னை பாதுகாத்துக் கொண்டார். கர்த்தருக்கே மகிமை.

சகோதரி. **றோணிக்கம்**, பேரை



என்னுடைய தோழியின் மகள் பயங்கர தலைவலியால் மிகவும் கஷ்டப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். பல மருந்துகள் சாப்பிட்டும் தலைவலி குறையவில்லை. மருத்துவர்கள் பல பரிசோதனை களை செய்து மூளைக் காய்ச்சலுக்கு அறிகுறியாக இருக்கும் என்று சொன்னார்கள். நான் சகோ. T. அருள்தாஸ் அவர்களிடம் சொல்லி ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு நல்ல சுகத்தைக் கொடுத்தார். கர்த்தருக்கே மகிமை.

சகோதரி. **வினோதினி**, காஞ்சிரக்கோடு



**காணத்தவறாதீர்கள்!**

**உங்கள் ஆறுதலின் நேரம்**
**நம்பிக்கை TV –ல்**
எல்லா செவ்வாய்கிழமையும் காலை 7.30 – 7.45 மணி வரை காணுங்கள்
**இயேசு கிறிஸ்து உங்கள் கண்ணீரைத் துடைப்பார்**

# சுவிசேஷ போர்முனையில்...




தொடர்ச்சி

தனது 33-ம் வயதில் இந்தியா வந்த வில்லியம் கேரிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வித்தியாசமான உணவு பழக்கம், பணம் பற்றாக்குறை, அதிக வெப்பம் புதிய வாழ்க்கை சூழல் என்று அனைத்துமே கடினமாக இருந்தது. வில்லியம் கேரி தனது பொருளாதாரத் தேவைகளுக்காக தாவரவியல் பூங்காவின் மேலாளராகவும், மைத் தயாரிக்கும் தொழிற்சாலையில் மேலாளராகவும் பணிபுரிந்தார் என்றாலும் அனேக நேரத்தை வேதாகம மொழி பெயர்ப்புக்காக செலவிட்டார். இந்த காலகட்டத்தில் அவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளை ஒன்றன்பின் ஒன்றாக இழந்தார். அவருடைய 5 வயது மகன் பீட்டர் இறந்த போது யாருமே குழிவெட்ட வராததால் தாமே குழியை வெட்டினார். அந்த நேரத்தில் 2 பேர் அவருக்கு உதவி செய்ய வந்தபோது வில்லியம் அவர்களை நன்றி பெருக்கோடு பார்த்து அவர்களுக்கு நன்றி செலுத்தினார். எந்த சூழ்நிலையிலும் அவர் மனம் வருந்தாமல் தேவன் தன்னை எதற்காக அழைத்தாரோ அந்த அழைப்பிலே உறுதியாக நின்றார். 1798-ம் ஆண்டு ஒரு இளம் மிஷனறிக் குழு வில்லியத்துடன் இணைந்தார்கள். உற்சாகம் அடைந்த வில்லியம் கேரி இன்னும் உற்சாகத்துடன் செயல்பட ஆரம்பித்தார். வேதாகமத்தை பல மொழிகளில் மொழி பெயர்த்தார். ஆனால் யாரும் எதிர்பாராத விதத்தில் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு மாலை பொழுதினில் இரவு பகலாக அவர் செய்திருந்த மொழிபெயர்ப்பு கையெழுத்து பிரதிகள் அனைத்தும் தீக்கிரையாகின. எவ்வளவோ முயற்சித்தும் தீயை அணைக்க முடியவில்லை. ஆனால் தனது மனதை தளரவிடாத வில்லியம் கேரி தனது புதிய குழுவுடன் இணைந்து தனது மொழிபெயர்ப்பு பணியை செய்து முடித்தார். 1800-ம் ஆண்டு செராம்பூர் கல்லூரியை நிறுவின வில்லியம் கேரி ஒரு அனாதை இல்லத்தையும் தொழுநோய் மருத்துவமனையும் ஏற்படுத்தினார். கல்கத்தாவில் உள்ள அரசாங்க கல்லூரியில் 30 ஆண்டுகள் பேராசிரியராக பணியாற்றிய அவர். தன்னுடைய வருமானத்தில் ஒரு சிறிய பகுதியை தன் செலவிற்காக வைத்துக்கொண்டு ஒரு பெரும் பகுதியை ஊழியத்திற்கென்று பயன் படுத்தினார். 1800-ம் ஆண்டிலே புதிய ஏற்பாடு அனைத்தையும் வங்காள மொழியிலே மொழி பெயர்த்தார். வில்லியம் கேரி புதிய ஏற்பாட்டை 40-க்கும் அதிகமான மொழிகளிலும், முழு வேதாகமத்தையும் 20 மொழிகளிலும் மொழி பெயர்த்தார். உடன்கட்டை ஏறுதல் மற்றும் உயிர் பலிக்காக பச்சிளம் குழந்தைகளை கங்கை நதியிலே தூக்கி எறிதல் போன்ற தீய பழக்க வழக்கங்களை நிறுத்த இவரே முக்கிய காரணமாக இருந்தார். பென்னின் பிரபு கவர்னர் ஜனரலாக இருந்த போது 1829-ம் ஆண்டு சதி என்கிற உடன்கட்டை ஏறுதல் பழக்கத்திற்கு தடை விதிக்கும் சட்டம் ஏற்றினார். ஞாயிற்றுக்கிழமை வில்லியம் கேரி ஆலயத்தில் செல்ல ஆயத்தம் செய்துக்கொண்டு இருந்தார். அவர் அந்த சட்டத்தை ஆங்கிலத்திலிருந்து வங்காள மொழியில் மொழிபெயர்க்க வேண்டும். தான் ஆலயம் சென்று வந்த பின் மொழி பெயர்த்தால் அதற்குள் அனேகர் கொல்லப்பட்டு விடுவார்களே என எண்ணிய அவர் ஆலயம் செல்லாமல் சதி என்னும் கொடிய பழக்கத்திற்கு முடிவுகட்டும் மொழிபெயர்ப்பு பணியை செய்து முடித்தார். இவ்வளவு அதிகமாக ஆண்டவரால் பயன்படுத்தப்பட்டும் பெருமை கொள்ளாமல் தன்னை ஒரு பயனற்ற ஊழியனென்றும் சிறதளவே பயன்பட்டவனென்றும் கூறினார் வில்லியம் கேரி. மற்றவர்கள் வில்லியம் கேரியை புகழ்வதை பொறாமை கொண்ட ஒரு பெண் வில்லியம் கேரி ஒரு ஷு மேக்கர் என்றும் கூறினார். அதை கேட்ட வில்லியம் கேரி தான் ஒரு ஷு மேக்கர் அல்ல. பழைய செருப்பை தைப்பவர் என்று தாழ்மையாக பதிலளித்தார். இத்தனை அரும் பெரும் காரியங்களை செய்து இந்தியாவில் 41 ஆண்டுகள் வாழ்ந்த அவர் ஒருமுறை கூட தன் தாய் நாடாகிய இங்கிலாந்துக்கு செல்லவில்லை. தான் வாழ்ந்த நாளெல்லாம் மக்கள் நலனுக்காகவே தேவ ஊழியத்தில் ஓடிய வில்லியம் கேரி 1834-ம் ஆண்டு ஜூன் மாதம் தன் உலக பயணத்தை முடித்து தான் நேசித்த இந்தியாவிலேயே அடக்கம் செய்யப்பட்டார். அவருடைய செயலின் பலன்களை இன்றைக்கும் நம் கண்களால் காண முடிகிறது. நாமும் தேவ சேவையில் தளர்ந்து போகாமல் மக்கள் பணியில் நிலைத்து வாழ்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

# God Reigns ...



| | | |
|---|---|---|
| YAHWEH | : | Lord Jehova |
| ADONAI | : | The Lord our Sovereign |
| ELOHIM | : | Mighty Creator |
| ELROI | : | God who sees |
| EL ELYON | : | The Lord Most High |
| EL OLAM | : | The Everlasting God |
| EL SHADDAI | : | Lord God Almighty |
| EL GIBHOR | : | Mighty God |
| JEHOVAH - JIREH | : | Lord Our Provider |
| JEHOVAH - NISSI | : | The Lord Our Banner |
| JEHOVAH - RAPHA | : | The Lord Our Healer |
| JEHOVAH - SHALOM | : | The Lord Our Peace |
| JEHOVAH - TSIDKENU | : | The Lord Our Righteousness |
| JEHOVAH - MKADDESH | : | The Lord Our Sanctifier |
| JEHOVAH - SABAOTH | : | The Lord of Hosts |
| JEHOVAH - SHAMMAH | : | The Lord is Present |
| JEHOVAH - RAAH | : | The Lord Our Shepherd |
| JEHOVAH - HOSEENU | : | The Lord Our Maker |
| JEHOVAH - ELOHEENU | : | The Lord Our God |

- IT TOOK GOD 6 DAYS TO CREATE THE EARTH, BUT 9 MONTHS TO CREATE YOU.... YOU'RE IMPORTANT.
- SOME OF GOD'S GREATEST GIFTS ARE UNANSWERED PRAYERS.
- YOU RELAX ON A PLANE WITHOUT KNOWING THE PILOT... SO WHY CAN'T YOU RELAX IN LIFE KNOWING GOD IS IN CONTROL.
- IF YOU HAVE TIME TO WORRY, YOU HAVE TIME TO PRAY.
- JESUS WASN'T CRUCIFIED IN PUBLIC FOR YOUR FAITH TO BE PRIVATE.
- GOD DOESN'T WHISPER BECAUSE HE'S TOO FAR... BUT BECAUSE HE IS SO CLOSE.

**- Rachel**



# இம்மாத ஊழியங்கள்

**உங்கள் அற்புதத்தின் நாள்**

**ஆனிபானு அரங்கம்**

**மார்த்தாண்டம்**

**செப்டம்பர் 5 / அக்டோபர் 3**

முதலாவது சனிக்கிழமை

காலை 10.00 மணி

**நற்செய்தி கூட்டங்கள்**

**செப்டம்பர் 10,11,12,13**

சாலேம் பெத்தேல் திருச்சபை, எட்டணி

மாலை 6.30 மணி

**மிஷ்னரி ஊழியம்**

**செப்டம்பர் 20,21,22**

**மத்திய பிரதேச மாநிலம்**

## ஆறுதலின் கூடாரத்தில்...

(பேருந்து நிலையம் எதிரில் மார்த்தாண்டம்)

**பெண்கள் கூடுகை 12-09-2026** இரண்டாவது சனிக்கிழமை

**குடும்ப ஆசீர்வாத கூடுகை**

எல்லா செவ்வாய்கிழமையும்

மாலை 6.30 - 7.30 மணி

**திறப்பின் வாசல் கூடுகை**

எல்லா வெள்ளிக்கிழமையும்

காலை 10.00 - 12.30 மணி





**இயேசு ஆறுதலளிக்கிறார் ஊழியங்கள்,** பேருந்து நிலையம் எதிரில், மார்த்தாண்டம்

04651 - 205080, 232152 / 9442302152